உ

# சண்முகநாதன்.

# SANMUKANATHAN.

| பத்திரவிகிதம் | |
|---|---|
| உள்ளூருக்குவருடக்கு ரூ | 1-50. |
| வெளியூருக்கு வருடக்கு ரூபா | 2. |
| தொலைவாய்பகுதிக்கு | |
| வருடக்கு | 2 50 |
| தனிப்பிரதி சதம் | 8. |

மாசமிருமுறைசுக்கிரவாரம்பிரகடனமாகும்.

ஒருமையுளாமைபோலைந்தடக்கலாற்றி, னெழிமையுமேமாப்புடைத்து.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு— | ரூ. ச |
| ஒருகலத்துக்கு | 7-50 |
| அரைக்கலத்துக்கு | 4-00 |
| கால்கலத்துக்கு | 2-60 |
| வரி 1-க்கு | 0 8 |
| அடுத்தமுறைக்கு டிெ அரைவாசி | |

மலர் உ } யாழ்ப்பாணம், பரிதாபி வருடம் ஆவணி மீ உஉ வ. (6-9-12) {இதழ்—அ


உ

குகமயம்.

அருவமுமுருவமாகி யனாதியாய்ப்பலவாயொன்றாய்ப், பிரமமாய் நின்றசோதிப்பிழம்பதோர்மேனியாகக், கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே, ஒருதிரு முருகன்வந்தாங்குதித்தன னுலகமுய்ய.

சங்கரன்றன் சால்பினுறுஞ் சண்முகநாதன்பெயரோ, டிங்கிதமாம்பத்திரமு மெங்காளுக்—தங்கமுடன், உன்னரியநன்னிலைமை யுற்றெங்கும் பல்கியிட, வன்னவன்றாளே துணையாம்:

## நம் பத்திரிகையின் போஷகர்கள்.

ஸ்ரீமாந் நா. இராமலிங்கம்
பிரபலவைத்தியர்.
" த. இளையதம்பி (வியாபாரம்.)
" நா. சின்னத்தம்பி
பிரபலவைத்தியர்.

இன்னும், இப்புண்ணிய புருஷர்களைப்போலச் சைவாபிமானிகள் உதவி புரிவார்களாகில பத்திரிகை தளர்வுறாது நடக்குமென்பது எமது சித்தம்.

## சண்முகநாதன்.

யாழ்ப்பாணம் பரிதாபி வருடம் ஆவணி மீ உஉ.

### வித்தியாசாலைகளிற் சன்மார்க்க போதனை.

மனிதருக்குக் கண்டபாவனை செய்தலாகிய குணம் இயல்பாகவேயுள்ளது. அதிலும் இளைஞர்கள் கண்டபாவனை செய்தலிற் கவனயாகவே யிருப்பார்கள். உதாரணமாக நமதுகுழந்தைகளை யாதாயினும் வேடிக்கை பார்க்கவேனும் திருவிழா முதலிய பிறவற்றிற்கேனும் அழைத்துச் சென்றால் அவர்கள் அங்கங்கேநடக்கும் பூசைக் கிரமங்களோ வழிபாடுகளோ மேளதாளங்களோ ஆடல்பாடல்களோ ஏதோ தாங்கண்ட கேட்டவற்றை நன்றாய்க் கவனித்து வீட்டுக்கு வந்தவுடனே தங்கள் கூட்டாளிகட் காயினும் பிதாமாதா முதலியோர்க்காயினும் ஒருமுறை போலப்பன்முறைபாவனை செய்து நடித்துக்காட்டல் நாம்அனைவரு மறிந்த விஷயமன்றோ? ஆதலின் வித்தியாசாலைக்குப் பிள்ளைகள்வருதல் குறித்தபாடங்களை கெட்டுருப்பண்ணி யொப்பித்துவிட்டுப்போக மாத்திரந்தான் என்றெண்ணம் உபாத்தியாயருக் கொருபோதும் இருத்தல் கூடாது. பெற்றார்க்கு மிருத்தல் கூடாது. ஏனென்றால் மாணாக்கன் வித்தியாரம்பஞ்செய்தது முதல்விவாகமாகும்வரையும் ஆசிரியன்கீழாக அவன் பார்வையிலேதானே யிருக்கின்றான். தன் வாழ்நாள் முழுமைக்கும் வேண்டிய பழக்கவழக்கங்களை யெல்லாம் பழகிக்கொள்ளுங் காலம் அப்பள்ளிக்கூடக் காலமாகவேயிருக்கிறது பின்பு "தொட்டிலிற் கொண்டகுணம் சுடுகாடுமட்டும்" என்றபடி பள்ளிக்கூடத்திற் பழகிய பழக்கமே மரணபரியந்த முண்டென்பதை நன்றாய் நம்பலாம் ஆதலினால் உபாத்தியாயரெனப்படுவோரெல்லாம் கல்விப்பயிற்சியோடு மாத்திரம் நின்றுவிடாது மதசம்பந்தமானபழக்கங்களையும் நல்லொழுக்கங்களையும் கவனித்துப் பயிற்றல் வேண்டும் "மன்னவனெப்படி மன்னுயி ரப்படி" என்றதுபோல ஆசானிடத்து எவ்வித மார்க்க நடையுடை பாவனையோசனை கருண்டோ அவையே மாணாக்கரிடத்து மழுந்தப்பெறு மாதலின் உபாத்தியாயர்கள் இயன்றவரையில் நற்பழக்க வழக்கங்களையே தம்மாணாக்கர்பின் பற்றும்படியொழுகிக்காட்டல் வேண்டும் சித்திரகாரனொருவன் தன்கீழ்ச் சித்திரம் பயில்வார்க்கு நல்ல விசித்திரமான தொழிலமைந்த சித்திரங்களை வரைந்து காட்ட அதனைப்பார்த்து அவர்கள் வரைந்து கைதேறல்போலத் தஞ்சிட்டரை நலவழிப்படுத்த விரும்புமாசிரியன்தானே நல்லொழுக்க முற்றவனாயிருந்து தன்னிடத்துள்ள நற்குணநற்செய்கைகளை மற்றையோர் பின்பற்றச்செய்வன் இதுபற்றியன்றே முற்காலத் திருந்த அரசர் யாவருந் தத்தங் குமாரர்களைக் குருகுலவாசஞ்செய்ய விடுத்தனர். அவர்களும் அக்குருகுல வாசத்தினாலே இகபரசாதனங்கட் கின்றியமையாதனவாகிய நற்குண நற்செய்கைகளை யெல்லாம் செவ்வனே பயின்றுகொள்வா ராயினர். "நிலத்தியல்பானீர்திரிந்தற்றாகு மாந்தர்க்கினத்தியல்பதாகுமறிவு" என்ற வண்ணம்கூடிய கூட்டத்துக்குத் தக்கவாறே அறிவும் விருத்தியாகு மாதலின் ஒவ்வொருவரும்தங்கள் பிள்ளைகளை நல்லாசிரியரிடத்தேவிட்டு எண்ணுமெழுத்து மாகிய கல்வியை மாத்திர மன்றி நல்லொழுக்கமும் பயிற்றுவித்த லவசியம். ஒருவேளை சில உபாத்திமார் கல்வியைமாத்திரம் பயிற்றலன்றி நீ ஏன் ஸ்நானம்பண்ணவில்லை? நீ ஏன் உன் சகோதரனை வைதாய்? வழியிலே ஒருவரோடும் சண்டையிடாதே? என்று வர்ச்சோலிகளை யெல்லாம் இழுத்துவைத்து விசாரித்தல் நமது கடமையல்லவேயென்பர் போலும் அங்ஙனமாயின் அவரிடத்தே பாடங்கேட்ட மாணாக்கனும் அவ்வாறே இந்த உபாத்தியாயர் நம்மைப் படிப்பித்து வேதனம் பெற்றுவயிறுவளர்க்குமோர் கூலியாளென் றெண்ணுவானேயன்றி யதற்குமேலாக ஒன்றாகவும் மதிக்கமாட்டான்.

இனிப் பிள்ளைகளுக்குச் சன்மார்க்கம் போதித்தல் உபாத்தியாயர்க்கு மாத்திரம் பொறுத்த கடனன்று. பிதாமாதாக்களும் பொறுப்பாளிகளா யிருக்கிறார்கள், தன்பிள்ளை யொழுங்காயிருக்க வேண்டுமென்று விரும்பும்பிதாத்தானும் ஒழுங்காயிருக்கிறான். உதாரணமாக "இந்தவேடிக்கைகள் விளையாட்டெல்லாம் நான் நல்லாய்ச் செய்துவந்தவன் நமதுமகனுக்கு விருத்தியில்லாத எல்லாம் அடியோடு விட்டுவிட்டேன்" என்று ஊரவர்கள் பேசும்வழக்கத்தை நாமறிவோம். பிதாமாதா நித்தியகர்மானுஷ்டானங்களைக் கிரமமாய்ச்செய்யாமலும்கொலை களவுகட்காம மாதியவற்றைச் செய்தும் வந்தால் அவர்கள் பிள்ளைகளும் அவ்வாறாக வேனும் அதற்கு மேலாகவேனும் வருவார்கள். நல்லொழுக்கத்திலும் அவ்வாறே. சிலர் துட்டப்பிள்ளைகளென்பார்கள் ஒருபோதும்பிள்ளைகள் துட்டர்களல்லர். இப்போது ஒரு கொளுக்கியோட்டில் வளைவு இருந்தால் அதை ஓட்டின் வளைவென்று சும்மா சொல்லிவிடுதல் புத்தியாகுமா? நமக்கவசியம் வேண்டிய பொருளாகிய ஓடுவளைந்துபோனது நமக்குநட்டம் அந்த வளைவுக்குக் காரணம் என்ன வென்றால் ஓட்டை வழிப்படுத்திய அச்சின்வளைவே ஓட்டிலும் வந்ததென்று துணியப்படும் அதுபோல இத்துட்டர் என்றுபெயர் எடுத்த பிள்ளைகளுக்குவழிகாட்டிகளாகஎத்தப் பிதாமாதாக குருஇருந்தனரோ அவரே துட்டரென்றறிய வேண்டும். ஐயோ பாவம் பிள்ளைகளேது செய்வார்கள்? அவர்கள் பழகியபழக்கம் அழுக்கற்ற வெள்ளைவஸ்திரத்திலேனும் கண்ணாடியிலேனும் எவ்விதமாகிய சாயத்தை யேற்றுகிறோமோ ஏற்றிய சாயத்தின்நிறமே அவ்வவற்றில் விளங்குவதுபோல எவ்வெக்குணத் தொழி லுள்ளவர்களிட மிருந்து எவ்வெவற்றைப் பயின்றனரோ அவ்வக்குணத் தொழில்களே அவர்களை மரணபரியந்தம் தொடர்ந்து அவ்வவற்றின் பயன்களாகிய நன்மை தீமைகளைப் பயக்கும்.

இனி மதக்கல்வி யென்றால் என்ன? இக்காலத்தில் கிறீஸ்தவர்கள் பள்ளிக்கூடங்களில் சைவர் மகமதியர் புத்தர் கிறீஸ்தவர் ஆகியபலரும் ஆசிரியராகவும் மாணாக்கராகவும், சைவர் மகமதியர் என்ற மற்றையோரது பள்ளிக்கூடங்களிலும் மேற்கூறியவாறு பலபடவிரவியிருத்தலினாலும் இவ்விடங்களில் மதபோதனை யெவ்வாறு நடத்தல்கூடும்? பிறசமயிகளை வருத்தித்தஞ்சமயத்திற் சேர்ப்பதே தருமம் என்பது ஒருசமயிகொள்கை. அருந்தவங் கிடந்து வருந்தி யீன்று வளர்த்தெடுத்த தந்தைதாய் பேணுது வயோதிகப் பருவத்தில் அவரைக் கைவிட்டுப் பெண்ணுக்கோ பொன்னுக்கோ வேறென்னத்திற்கோ மயங்கிய பிள்ளைகளைத் தம்மதத்திற் சேர்ப்பது மேலான தருமமென்பது ஒருசமயி கொள்கை உயிர்வதை செய்தல் பாவமென்பது ஒருசமயி கொள்கை. சிறியனவெல்லாம் பெரியனவிற் கிரையாதலால் பாவமில்லையென்பர் மற்றொருசமயி. தமயன் இருக்கத் தம்பி விவாகஞ்செய்யலா மென்பர் ஒருசாரார். அதுகூடாது பாவமென்பர் மற்றொருசாரார். இங்ஙனமே சமயங்கடோறும் விதிவிலக்குகள் பலதிறப்படக்கிடத்தலின் அவ்வவர் மதத்தை யெவ்வளவுங் கடவாமல் எம்மதத்தினர்க்குஞ் சம்மதமாயுள்ள பொதுத்தருமங்களைப் போதித்தல்தகுதி. உதாரணமாக கொலை, களவு, கள், காமம் பொய்சூது, ஆசை கோபம் அழுக்காறு என்பனவால் வருந்தீமை களையும், சீவகருணை, பொறை, அடக்கம், ஆசாரம் பரோபகாரம், முதலியனவால்வரும் பெருமைகளையும் இன்னும் தக்கவின்ன தகாதவின்ன என்றும் இவற்றை யறிந்து பலனீதற்குக் கடவுள் ஒருவருண்டென்றும் போதித்தல் புத்தியாகும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் நல்வழி, நன்னெறி, வெற்றிவேற்கை, உலகநீதி, திருக்குறள் முதலிய நூல்களை யாவரும் கைக் கொள்ளலாம்.

முற்காலங்களில் அயோக்கியம், அநாகரீகம், அநாசாரம் என்றெண்ணி யொதுக்கப்பட்டவை யெவையோ அவையெல்லாம் இக்காலத்து யோக்கியம், நாகரீகம், ஆசாரம் என்றெண்ணி யேற்றுக்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக எழுதுகோல்களாற் கற்பலகையிலேனும் காகிதத்திலேனும் எழுதும்போது எழுதுங்கால் அடிக்கடி வாயிலிட்டுக்கொள்வதும், யாதாயினும் பிழைவந்துவிட்டால் எச்சில்தொட்டழிப்பதும் இக்காலத்துச் சாதாரண யோக்கியம். உபாத்தியாயர் மாணாக்கன் வீட்டுக்குப்போய்க் கற்பித்த லிக்கால திருத்தம் மாணாக்க னுபாத்தியாயர் வீடுதேடிச் சென்று கற்றல் அக்காலதிருத்தம். அரு பிதா மாதா முதலியபெரியோரெதிரே ஆடையொதுக்கிக் கைகட்டி வாய்புதைத்து நிற்றல் அக்காலவழக்கு. அவர்களெதிரே தோள் வேட்டியெடாது நிமிர்ந்து நிற்றல் இக்காலவழக்கு. தலையிலே மாட்டுக் குளம்பளவு இடமுள்ள குடுமிவைத்துக்கொள்ளலும், விவாகஞ்செய்தோர் கடுக்கன் பூணலும், தலைப்பாகை யணிதலும், தாம்பூலந்தரித்தலும் அக்காலநாகரீகம். தலையில் அதிவிசித்திரா லங்காரமான குடுமிகள் வைத்தலும், சௌள கருமமில்லாமலேயிருத்தலும், முண்டிதமாக்கலும், கத்தரித்தலும் குடுமியை முடியாது அவிழ்த்துவிட்டுக்கொள்வதும், விவாகஞ்செய்தோர் கடுக்கன் பூணாமை தாம்பூலந் தரியாமை, தலைச்சீலைதரியாமைகளும் பிறவும் இக்கால நாகரீகம். அக்காலத்தவர்க்குக் குற்றமெனக் காணப்பட்டன வெல்லாம் இக்காலத்தவர்க்குக் குணமெனக் காணப்படுகின்றன.

இங்கிலீஷ் வித்தியாசாலைகளிலே கற்றவர்களும் மேலைத்தேசவாசிகளின் சகவாசம் பெற்றோரும் ஆனசிலர் சோம்பலினாலேனும் அறியாமையினாலேனும் கைக்கொண்டுவரும் சில அநாசாரமான செயல்களை நம்மவருட் பெரும்பாலார் நன்குமதித்து நாகரீகமென்றெண்ணி ஆசாரங்கெடுதல் எவ்வளவோ வருந்தத்தக்கது!! இதனாலேதான் சிலபிள்ளைகளின் பழக்கவழக்கங்களைக் கண்டிக்கிறதற்குச் சில உபாத்தியாயர்கள் அஞ்சுகின்றார்கள். இவ்வாறு அஞ்சும் ஆசிரியன் தன்மாணாக்கனுக் குரிய இகபரசாதனங்கட் குரிய நன்னெறிகளை யெடுத்துரைத்த லெங்ஙனம்? எந்த வித்தியாசாலையிலே எந்தஉபாத்தியாயர் மாணாக்கர் ஆசை கோபம் அழுக்காறு முதலியவற்றில் இருந்து பிறர்க்கல்லன புரியுங்கால் அவரைத் தக்கவாறறுத்து நல்லன மொழிந்து இயன்ற வொழித்து வழிப்படுத்தாது பராமுகமா யிருக்கின்றாரோ! அந்த வித்தியாசாலையே தீமை பயிலிடமாகவும் அந்த உபாத்தியாயரே தீமை பயிற்

வோகுகவும் எண்ணப்படுவதிற் றவறென்ன? இம்முறை பிதா மாதா முதலாயினோர்க்குமுண்டு, உபாத்தியாயர்போலவே பிதாமாதாக்களும் தங்கள் பிள்ளைகளின் பொருட்டு நற்குணநற்செய்கை மேற்கொண்டு ஒழுகித், தம்பிள்ளைகட்கு நல்லொழுக்கம் பயிற்றவேண்டியது அவசியம். "ஒழுக்கமுயர்குலத்தின்று" என்றதனால் அவ்வொழுக்க முயிரினுமோம்பப் படுவதாகும். மதபோதனையென்றால் ஒருசமயத்தார் மற்றொருசமயத்தாரையும் அவர் நூலையும் அவர்கொள்கையையும் நிந்தித்தல் மாத்திரமேயென்று சிலர் நினைந்து அங்ஙனம் நடத்துகின்றார்கள் ஒருசமயத்தவர் வேறொரு சமயத்தவரைச் சதா தூஷணைசெய்தல் மதபோதனையாகாது. விதித்தன செய்தலும், விலக்கியன வொழிதலுமாகிய பொதுத் தருமங்களையும், கடவுளிலக்கணங்களையும், வழிபடு முறையையும, முத்திசாதனங்களையும், இவைபோன்ற பிற சிறப்புத்தருமங்களையும் எடுத்துபதேசித்தல்தான் மதபோதனையாகும். ஆனால் இப்பொழுதுள்ள வித்தியாசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் சன்மார்க்கபோதனை செய்யத்தக்கவர்களா என்பதை வித்தியாசாலையதிபர்களும் மாணுக்கரும், பெற்றாரும் நன்குகவனித்தல் தக்கது. சுபம்.

## சட்ட நிருபணசபையில் ஸ்ரீமாந் கௌரவ பொ. இராமனாத னவர்கள்.

[——(——)——]

இந்தமுறைச் சட்டநிருபண சபையினங்கத்தவர்பலரும் தத்தமபிப்பிராயங்களை வெளியிட்டனர். சென்ற ஸ்ரீமான் கௌரவ பொ. குமாரசுவாமித் துரையவர்களின் பின்பு துயில்கொண்டிருந்த சபை திடுக்கிட்டுக் கண்விழித்தாற்போலக் கற்றோர் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் கௌரவ பொ. இராமனாதனவர்கள் பல்லாண்டுகளாகப் பலசபைகளிற் பழகிய பழக்கவழக்கப் பழம்பாடங்களை யெல்லாம் தமது ஞாபகப் பெட்டகத்தி லிருந்து ஒன்றன்மேலொன்றாய் எடுத்துக்காட்டப் புதுப்பாடக்காரரும் மறதியுள்ளோரும் நன்றாய் ஆயத்தமாக்கிக் கொண்டே [illegible] விஷயத்திற் கண்ணுங் கருத்துமாய்ப் பேசிமுடிக்கவும் மிகக்கவனம் வைக்கவும் சபையிருந்தவும் காலம்வாய்த்துக்கொண்டது. ஸ்ரீ இராமனாதனவர்களும் தமதபிப்பிராயத்தை வெளியிடத்தொடங்கி (1) ஜெயிலாபாலத்தின் வேலை சென்ற சித்திரை 16உ வரையில் எவ்வளவாக நடந்திருக்கிறதென்று பகிரங்கவேலைப் பகுதித்தலைவரையும், (2) மோட்டர்வண்டியோட்டிகள் தங்க ளெசமானரோடு செய்துகொள்ளு மொழுங்கைப்பற்றி யாதாயினுஞ் சட்டதிட்டஞ் செய்வதுண்டோ என்று துரைத்தனத்தாரையும். (3) இரத்தினபுரி மல்வலை யென்னுமிடத்திற் "கன்சபா" என்னுங் கிராமக்கோட்டுவரி 50-சதமா யிருந்ததை 1 ரூ-28-சத மாக்கியது யாது பிரமாணங்கொண்டு? என்றும், (4) புதிதாயுண்டாக்கிய மதுச்சட்டப்படி எந்த எந்தக்கிராமத்தில எத்தனை எத்தனை தவறணைகள் வைக்கப்பட்டன? அவற்றால் எய்திய பயன் என்ன? என்பதின் முழுவிபரம்வேண்டும் என்றும, (5) வைத்திய வைத்தியசாலையை வேறிடத்துக்குமாற்றும் நோக்கமென்ன என்றும் பலகேள்விகளைக் கேட்டார்கள். அவற்றிற்குப்பதில் சொல்லத்தொடங்கிய இராசமாலிகிதரவர்கள் இராமனாதனவர்கள் கேள்விகளை மாத்திரங் கேட்கலாமேயன்றி அக்கேள்விகளை விளக்கப்படுத்துவதற்குச் சபைப் பிரமாணம் இடங்கொடாதென்று சொல்ல இராமனாதனவர்கள் அதைச் சட்டைசெய்யாது தாமெடுத்ததை விளக்கப்படுத்தத்தொடங்க, இராசமாலிகிதரவர்கள் சபையின்பிரமாண புத்தகத்தை வாசித்துக் காட்டித் தாங்காட்டிய பகுதியை விளக்கப்படுத்தி இராமனாதனவர்கள் கேள்வியைமாத்திரங் கேட்கலாம், அக்கேள்வியை விளக்கப்படுத்தல் கூடாதென்று தடுத்தனர். ஆனால் அவர் அப்பிரமாணத்திலேதானே கேள்விகேட்பவர் தங்கேள்வியை விளக்கப் படுத்தலாமெனவும் கூறியிருப்பதை அறிந்த இராமனாதனவர்கள் மிகக்கடுங்கோபங் கொண்டார்கள். பின்புபிரமாணப்படி கேள்வியை விளக்கப்படுத்தலாமே யெனத் தேசாதிபதியவர்களை வினவியபோது தேசாதிபதியவர்கள் பேச உத்தரவளித்தார்கள். ஆனால் இராமனாதனவர்கள் கேள்விகளை மாத்திரம் கேட்டுவிட்டு மற்றவற்றைப்பேசாது விடுத்தார்கள். பின்பு முதல் மூன்றுகேள்விகளுக்கும் விடையளிக்கப் பட்டது பின்பு புதுமதுச்சட்டத்தின்படி எவ்விடங்களில் எத்தனை தவறணைகள் வைக்கப்பட்டன என்று தொடங்கி "அவ்வக்கிராமவாசிகளின் எண்ணப்படியே தவறணைகள் திறத்தல் அடைத்தல் செய்யப்படும் என முன்னைசங்கத்தில் வாக்களித்தபின்பே உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தவர்கள் உடன்பட்டவர்கள். ஆனாற் சட்டமாங்கேறி இவ்வளவுகாலமாகியும், முன்கூறியபடி அவரவர்களின் எண்ணமறிந்துதான் தவறணை வைத்ததென்னுஞ் செய்தி நாம் இன்னுமறியவில்லை" அங்ஙனஞ்செய்திருந்தால் அதனையுங்காட்டுக என்றுகேட்டார்கள். இராசமாலிகிதரவர்கள் அவர்வர்களைக் கேட்டுத்தான் தவறணைதிறப்பது என்றது தமக்கு நினைப்பில்லையென்றும் அவரவர்களின் எண்ணத்தையறிவதும் அநுசரிப்பதும் துரைத்தனத்தாருக்கு விருப்பமாயினும், முழுவதும் அவரவர்களைச் சார்ந்துநிற்கக் கடனில்லையென்றும், கூறி மொத்தமாகமாகாணம் ஒன்றில் இத்தனை தவறணை என ஆகத்தொகை சொல்லி அந்தப்பிரமாணங்கள் இப்போது அச்சிலிருக்கிறபடியால் பின்பு பார்த்துக்கொள்வோமென்று முடித்து, "இந்தக்கேள்வியாளர் அரசுசேர முன்னை நாளை யிக்கேள்விகளைக் கேட்கிறதற்கென்ன? கேள்விக்குறிப்புகளை இடம்தப்பிவைத்து விட்டார்போலும்" என்றுசிறிது ஆளிலுந்தாவிப்பேசினார்கள் உடனே இராமனாத னவர்கள் "இடந்தப்பிவைக்கவுமில்லை" தப்பவிடவுமில்லை (நோமிஸ் லெய்ட் நோமிஸ்ரேக்) என்று சிலேடையாற் கூறி வாயடக்கினார்கள், அன்றியும் நான்கேட்ட கேள்விக்குப் பதில் கூறவில்லை அதாவது இன்ன இன்ன கிராமத்தில்எத்தனை எத்தனை தவறணைவைத்தது? அவற்றால் வந்த நயநட்டமென்ன என்பது கேள்வி. சரியான பதில் வரவில்லையே! என இராமனாதனவர்கள்கூற, ஒவ்வொரு கிராமத்தின் பெயரும் எனக்குத்தெரியாது. அப்படித்தெரியவேண்டியது அவசியமில்லை, வேணுமாயின் அவ்வம்மகாண ஏசண்டுமாரிடம் கேட்டுச்சொல்வேன் என இரசமாலிகிதரவர்கள் சொன்னார்கள். அதற்கு இராமனாதவர்கள் ஒவ்வொரு கிராமப்பேரும இரசமாலிகிதர் கட்டாய மறிந்திருக்கவேண்டியது, அறியவில்லையென்பது ஆச்சரியம். அறிந்திருந் [illegible] ப்பம் இன்னகிராமத்தார்கு விருப்பமில்லையென்றறிந்து விதிக்கவும் விலக்கவும் கூடும், என்று நான்கேட்ட கேள்விக்குப் பதில்சொல்லுதல அவசியமென்று முடித்தார்கள். தேசாதிபதியவர்கள் இராமனாதனைநோக்கி இச்சபையிற் பேசும்போது இராசமாலிகிதர் என்று உத்தியோகப்பெயரால் அழையாது துரைத்தனத்தார்கள் என்பது தகுதியன்றார்கள். அதற்கு இராமனாதனவர்கள் உத்தியோகஸ்தரை உவுத்தியோகப்பெயரால் அழைக்கச் சர்வாதிகாரமுண்டென்று மறுத்தார்கள். பின்பு நாட்டுச்சிங்களர் பிரதிநிதியெழுந்து சாராயமே தீமையுள்ளது கள்ளுத்தீமையற்றது. ஆதலால் தீமையுள்ள சாராயம் வடித்துச் சீவியம் செய்தவர்கள்தான் தீமையற்றகள்ளை விற்கவிடாது தடைசெய்கின்றனர். என்றார். அதற்கும இராமனாதனவர்கள், சாராயத்திலும் கள்ளே தீயது. சரீரமுயற்சி மனமுயற்சியைக்கெடுப்பது, மிகமலிந்தது, மலிந்தால் யாவரும்பாவிக்க லேதுவாகும் பெண்பாலாரும் பாவிக்க லேதுவாகும். இக்குடி எல்லாச் சமயத்தவராலும் விலக்கப்பட்டது. ஆதலின் விலையுயர்ந்த சாராயத்திலும் விலைகுறைந்தகள்ளே மிகத் தீமையுள்ளது என்று விடையளித்தார்கள். இவ்வாறு சமயவிரோதமென்று சமயத்தையொட்டிப் பேசும்போது இராசமாலிகிதரிடத்துச் சிரிப்புத்தோன்றியது, உடனே இராமனாதனவர்கள் இரசமாலிகிதரைப்பார்த்து இனிநீர் இக்குணங்களை விட்டுவிடவேண்டும். நீர் தேசாதிபதியாகப் போகுமிடத்துக்கு இக்குணங்களைக் கொண்டுபோகவேண்டாம் என்று இடித்துரைத்தார்கள் இவ்வாறு மூலைக்கு மூலைநின்ற வாதங்கட்கெல்லாம உடனுக்குடன் விடையிறுத்த வல்லபத்தை நோக்குமிடத்து அபிமன்னன்யுத்தம் ஞாபகத்தில் வராதிராது!! இறுதியில தேசாதிபதியவர்கள் தாம் திரிகோணமலையி லிருந்தபோது தமிழ்பிதானிக் கூட்டத்தில்வந்த நெடுந்தீவுமணியம், இந்தப்புதுச்சட்டம் ஒருதெய்வீகமானதென்றும, அதனால் யாழ்ப்பாணத்துக்கு வெகுதிருத்த முண்டென்றும் கூறினாரென்றும், இப்போ தங்களெண்ணத்துக்கு மாறாயிருப்பவர்களெல்லாம் வர்வரத் தம்பக்கத்துக்கே வரக்கூடிய நன்மைவருமென்றும் கூறி ஒருவாறு முடித்தார்கள். உரைகல் லிருந்தாற்றானே மாற்றேறியபொன்னுக்கு மதிப்பேறும்.

## ஐக்கியசகாயநிதிச் சங்கம்.

——(÷)——

இக்காலத்திலே பெரும்பொருள் வைத்திருக்கும் மிகப்பெருஞ் செல்வர் சிலரேயன்றி நடுத்தரமானவர்களும் ஏழைகளுமாகிய பலர் தஞ்சீவனத்துக்கு வழியறியாது மனந்தடுமாறுவதை யாவரும் வெளிப்படையா யறிவார்கள். அதெதனாலென்றால் நிதானம் சத்தியம் நாணயம நம்பிக்கையெனப்படுவனவில்லாமையினாலேதான். என்னை? எத்தொழிலைச் செய்பவனுக்கும் சிறிதுமுலதனம் கைவசமிருக்க வேண்டும் முதலிலார்க் கூதியமில்லை முதற்பொருளில்லாதவர்கள் தொழிலாளிகளாயும் முயற்சியுள்ளவர்களாயுமிருந்தால யாதாயினும் செல்வர் [illegible] வாய்நாணயமாகவோ வேறெவ்வழியாகவோ சிறிது பொருள்கடன்படுகின்றனர். அங்ஙனங்கடன்பட்டுப் பெற்றமுற்பணத்தைச் செலவுசெய்து தந்தொழில்நடத்தும்பொழுது அத்தொழிலில் நயம்அகப்படா திருப்பினும் பொருள்பெற்றவனிறந்தலேனும் கடன் தீர்க்கவழியின்றி யலைக்கும்பொழுதேனும் கொடாமலபகரித்தபோதேனும் பொருள்கொடுத்தவன் நட்டமடைகிறான். சிலயோசக் கருத்துடையார் பிரபுகள்போல நடித்து தம்மையறியாத பிறரை யேமாற்றிப்பொருளைப் பெற்றுக்கடன்காரர் வந்தவுடனே தம்மிடத்துக் காணிபூமியில்லை நாமென்செய்வேம் என்றுவிடுகின்றனர். அதனாற் பொருள் கொடுத்தவன் கட்டமடைகிறான். இனிக் கடும்வட்டிக்காரர் வசியப் பிடித்துக்கடன் கொடுத்துப் பின்பு அவர்களது காணிபூமிகளைக் கண்டவிலைக்கு விற்றுத்தங்கள் முதலையும் கடும்வட்டியையும் பெற்றுக்கொண்டு எஞ்சிய பணமுண்டானால் கோட்டுச் செலவுகாட்டி முழுதும் அபகரித்து விடுகின்றனர். இவ்வாறு சோம்பலாலும் அறியாமையாலும் அயோக்கியத் தனமையாலும் கடன்கொடுக்கல் வாங்கல்களும் தொழில்களும் நடைபெற வழியில்லாமலும் சனங்கள வருந்தவும நிகழ்வதாயிற்று அன்றியும் பேராசைபிடித்தசிலர் அநியாயவட்டியிற் பெருபொருள் சம்பாதிப்பதாகிய ஒன்றையே பொருளெனமதித்து வேறொன்றையுங் கவனியாது கண்டவர்களுக் கெல்லாம் கடன்கொடுத்துவிட்டு மீள அறவிடும்வழி வகையறியாது விழிக்கின்றனர் வேறுசிலர் கடன் தீர்க்கும் வழியறியாமலே கண்டமட்டுங் கடன் பெற்றுத் தொழில்செய்யும் முறையுந்தெரியாமல் தம்மையும் பொருள்கொடுத்தவரையும் கட்டப்படுத்தி விடுகின்றனர். ஆதலால் இவ்விதத் தீமையொன்றும் வாராமற் பாதுகாத்தற் கேதுவாயுள்ளது. ஐக்கியசகாய நிதிச் சங்கமொன்றுதான் சிலகாலங்களின் முன் சுதேசிய சகாயநிதிச்சங்க மெனச்சிலவிருந்தனவாயினும சங்கத்தவர் அவரவர் என்னும் இருப்பிரிவினருள்ளும் உள்ள அயோக்கியத் தனங்களால் யாவுஞ் சிதைந்துபோயின முன்பின யோசனை யின்றிக் கடன்படுவதில் நம்மூரவர் சிறிதும்பின்னிடார். இத்துணைச்செல்வர்வறிஞர் முதலிய யாவரிடத்தும் ஓரேபடித்தாயுண்டு இவர்களதெண்ணப்படி வசதிக்கேற்றவாறு கேட்டபொருள் தொகையைக் கொடுத்து ழிக்கத் துசங்கட்டி முன்னிற்பவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளே. இவர்கள் வியாபார முறையானே பொருள்விருத்தி பண்ணத் துசங்கட்டி நிற்பவர்களே யாயினும் அதர்ம வழியிற பொருளீட்டுவோரென்று பலர்க்குத் தோன்றினும் உண்மையிற்பார்க்குமபோது அவர்களை அவ்வாறு அதர்மவழியிற் பொருளீட்டுவோரெனல் தகுதியன்று எவ்வெனில் நாட்டுக்கோட்டையார் நம்மூர்க் கன்னியர்கள் நம்மூரவர்களின் குணங்களை நன்கறியாமையினாலும் காணிபூமிகளின் நிலைமையென வறியாமையாலும் நம்மூரவர் தவறுதலின்றிக் கடன் தீர்ப்பவர்கள் எனனும் நம்பிக்கையினாலும் தான் அவர்கள் தங்கள் பணமுட்டைகளை முதலில் அவிழ்த்துவிட்டுப் பின்பு பணங்கொடுக்க வழியில்லாதபோது காணிபூமிகளைவிற்றதும் கடன்மறியல் வைப்பதும் அவர்களிடம் குறைகேட்பதும், ஆதலின் அவர்களைக் குறைகூற லதகுதியன்று கடன்படும் நம்மவர்களன்றோ அதுதீர்க்கும் வழியையும் முன்புதானே யோசிக்கவேண்டும்-மற்றைத் தேசங்களிலெல்லாம் ஐக்கிய சகாய நிதிச்சங்கங்கள் சட்டப்படி யேற்பட்டன. நம் தேசத்திற்றான் அவ்விதில அநுகமக்கிருத் தலவசியம். இவ்வித சங்கங்களைச் சட்டப்படி வைக்கிறதற்குச்மதாசினர்முன்வந்திருப்பது பெருநன்மையே நம்மவரும் எத்தனையோ பல்வித சங்கங்கள் அங்கங்கே நடைபெறுகின்றன. இவற்றைச் சீட்டுப்போடுதல் சீட்டுப்பிடித்தல்என வழங்குவர்- பெண்களும் ஆடவர் பலரும் சேர்ந்து ஆள்ஒன்று மாசம் ஒன்றுக்கு அரைரூபா தொடக்கம் ஐம்பது ரூபாவரையில் விதம் கட்டி 50 பேர் 100 பேர்வரையிற் கூடி இரண்டு வருடம் நூ வருடம் எனக்காலமும் வரையறுத்துச் சீட்டுப்போடுகிறார்கள் ஒவ்வொருமாசமும் சீட்டுப்போட்டுப் பெயர்விழுந்தவர்கள்பணமெடுப்ப தென்று மிகவூக்கத்துடன் நடத்துகிறார்கள். ஆனால்இதில பத்துக்கு 2 தான் நம்பிக்கையுடன் நன்னிலைக்கு வருவது. வந்துமென்ன பெட்டைக் கோழி கூவிவிடியுமா? சீட்டுக்குக்கொடுப்பதிலும் பெண்களோடு கூட்டுவாணிபம் செய்வதிலும் அப்பணத்தை வீட்டினோர் மூலையிற்போட்டுவைத்தாலும் வேண்டியபோ தெடுக்கலாமே! ஒழிந்த பத்துக்குளட்டுவிதமும் மோசக்காரரால் நாசமாகின்றன. இதுமாத்திரமா? சிலவிடங்களில் தாமனுபவிக்கும் வண்டியுடையாதியவற்றிற்கும் சீட்டுப்போடுகிறார்களாம்-ஆனால் இதவிஷயத்தில் அரசாட்சியாரும் முன்வந்துவிட்டார்கள், அவர்களும எப்பொழுதும ஆயத்தந்தான். இவற்றைமுன்னின்று நடத்தி வைப்பதற் குத்தக்க பரோபகார சிலப்பிரபுக்கள முன் வராமையேயுள்ள குறை. ஆதலின் நமமூர்ப்பிரபுககளே சற்றே கண்விழியுங்கள். சுபம்.

## அவசிய அறிக்கை.

நமது கையொப்பநேயர்காள்! "சண்முகநாதன்" தங்களுக்கு வராதிருப்பினும் காலதாமத மாகி வரினும், தயைகூர்ந்து உடனேதானே இன்ன இலககம் பிந்தி வந்தது, இன்ன இலக்கம் வரவில்லை, என்று அறிவிக்கும்படி வேண்டுகின்றோம், நம தியந்திரசாலை வேலையாட்களாலோ 'பத்திரிகை'' யொப்பிக்கும் வகையினாலோ வருந் தவறுகளை நீகக வேண்டியிருக்கிறது. ப—ர்.

## விசேட அறிவிப்பு.

பிறவூர்கையொப்ப நேயர்கள் தங்கள் உத்தியோகஸ்தானங்களை விட்டு வேறிடங்கட்கு மாறும பொழுது தயைகூர்ந்து தங்கள் புதுவிலாசங்களையறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்றியும் முல்லைத் தீவுப்பகுதியில் சோதிடர் ம-ா-ா-ஸ்ரீ நா. கந்தையாமுதலியார் அவர்களை இப்பத்திரிகையின் அவ்விடத்து முகாமைக்காரனாக நியமித்திருப்பதால் அவ்விடத்துள்ள நமது நண்பர்கள மேற்படியா ரிடத்தில் பத்திரிகைப் பணம் முதலியவற்றைக் கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும் படியும் கேட்டுக்கொள்ளுகிறோம.

## சமா சாரங்கள்.

காலநிலை—சென்றவாரம் ஒரு மழை பெய்தது பின்பு காணவில்லை-வெயிலதிகம் அடங்கியிருந்த காற்று அடித்துக்கொண்டே யிருக்கிறது.

நல்லைக்கந்தசுவாமிகோயில்—மேற்படி ஆலயத்தில் கொடியேறித் திருவிழா நடைபெறுகின்றது- செவ்வாய்க்கிழமை ரதோற்சவமும், புதன்கிழமை தீர்த்தோற்சவமும்நடைபெறும்.

பெற்றிரவண்டியைச் சுட்டது—கொக்குவிலுக்கும் சுன்னாகத்துக்கு மிடையிலே 24ஆ-மையில்போஸ்றில் வண்டியோடும்போ யாரோ என்ஜின்வண்டியை சுட்டனர் இரண்டுசென்னம்பட்டது. பொலீஸ் விசாரணை செய்தும் ஒருவரும் அகப்படவில்லை.

ஸ்ரீமான்கௌரவபொ. அருணாசலந்துரையவர்கள்-இந்தியாவுக்குப்போயிந்தகௌரவ பொ. அருணாசலந்துரையவர்களும, பாரியாரும் பிள்ளைகளுஞ்சென்றவாரம்பாரதவென்னும் கப்பல்மார்க்கமாய்க் கொழும்புவந்துசேர்ந்தார்கள்.

—மாத்தளையிலிருந்து 7-மையில் தூரத்தேயுள்ள ஒவலிக்கந்த எனனுமிடத்தில் கிரிபண்டா என்பவன் லாமிண்டு எனபவளைத் தலையில் உலக்கையா லடித்துக்கொன்றான் காரணமென்ன வென்றால கொலைஞன தனமகனிறந்த தினத்தில் தருமங்கொடுக்கிறதற்காக அவள் வளவில் மிளகாய் பிடுங்கினாளம். அப்பொழுது அவள் வாயில் வந்தபடி வைது மன்றிப் புருஷன் முன்னிலையிலும் வைதாள், புருஷனுக்கும அவனுக்கும் சண்டைநடந்தபோது விலக்கும் பொருட்டுச் சென்ற மனைவி தலையில் அடிபட்ட தாம்

—மட்டக்களப்பைச்சார்ந்த ஏறூரிலே ஒருசெல்வன் வீட்டில் ஒருகள்வன் புகுந்துசெல்லஞ்போது வீட்டுக்காரன் துவக்காற்சுட்டுவீழ்த்தினன். கள்வனிறந்தான். சட்டவனில் விசாரணை நடக்கிறது.

—

தீவிபத்து-மட்டக்களப்பைச்சார்ந்த காத்தான்குடியிற்சென்ற மீ-16-உ வெள்ளிக்கிழமைபகல் 2 மணியளவில் பக்கீர்முகயிதீன்பாவா என்பவரது ஓலைக்கூரைவீட்டிற் சடுதியாய்த் தீப்பற்றி 13 வீடுகள் சாம்பராயின. கோழி, ஒளி நாய்முதலிய சிலவற்றிற் கன்றி மனிதருக்குப் பழுதில்லை. 2000 ரூபா வரையில் பொருள்நட்டம் 10 வீடுவரையில் கிடுகுகளும் கூரைகளும் தீப்பற்றுது தடுக்கப்பெரும்பாடும் படுகப்பட்டன.

—

—மட்டக்களப்பில் குடியிருப்பென்னுமிடத்தில் இரவிலே வண்டியோட்டிச் சென்ற ஒருவன் கவனக்குறைவினால் தவறிவிழுந்து வண்டியிலகப்பட்டு உடனே உயிர்துறந்தான்.

—

முதலை—மட்டக்களப்பில் பாண்டிருப்பென்னுமிடத்தில் தெருக்கரையிலுள்ள பிள்ளையார் கோயிலடியில் நாட்டுக்கமக்காரன் ஒருவன் சாயங்காலம் 7 மணியளவில் வயலால் வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது 6 அடி 9 அங்குலமுள்ள முதலையொன்று அவனைப்பிடித்துமடி கெடுந்தூரம் தூக்கிக்கொண்டுபோயிற்று அவன் ஒடிக்கொள்ள முடியாமல் பெருஞ் சத்தமிட்டதைக்கேட்ட புலவர் வழிப்போக்கர் உறவினர் ஆகிய பலரும் ஆயுதபாணிகளாய் ஓடிவந்து அம்முதலையைக் கொன்று அவனை மீட்டனர். இந்தமுதலைதான் முன்னுமொருவனைக் காயப்படுத்திவிட்டுத் தப்பிவிட்டது. இப்போதான முடிந்தது.

—

படுகொலையும் தற்கொலையும்—முன்பு பட்டாளத்திலிருந்தவராகிய கப்டின்ஹிக்ஸ் மூரேயென்பவர் ஈஸ்ற் போன் என்னுமிடத்தில் தனது 2 பிள்ளைகளையும் வெட்டிக்கொன்று மனைவியையும் படுகாயப்படுத்தி வேறு மசிலரைக் கொன்றுவிட்டு வீட்டையும் செருப்புவைத்தெரித்துவிட்டுத் தானும் இறந்தனராம். பிரேதசோதனையில் "நான் அழிகிறேன் என்னைச்சார்ந்தவர்களை யெல்லாம் அழித்துவிட்டேன்" என்று ஒப்பமில்லாக் கடிதமிருந்ததாம். மூளையில் வெப்பத்தால் வந்த நோயே இதற்குக்காரணமென்று வைத்தியர்கள் சொன்னார்களாம்.

—

—சிதாகுண்டத்து மகந்து வாகிய ஐதிந்திரவான் என்பவர் சென்ற மீ-6உ-2 மணிவரையில் சிதாகுண்டத்திற் சுடப்பட்டார். கொலைஞன் அகப்படவில்லை. கோயிலதிகாரவிவகாரமே கொலைக்குக் காரணமாம்.

—

—திருவனந்தபுரத்திலுள்ள கிருஷ்ணன்குளத்தில் அமிழ்ந்திய ஒருவனை மீட்ட சிறுவனுக்கு அரசாட்சியார் சன்மானஞ் செய்தனராம்.

—

—ஜுகஸ்தி சனவிபாசிக் கலகவழக்கில் அகப்பட்ட 52 எதிரிகளில் 22-பேர் விடுதலையானார்கள் 3 பேர் இன்னும் ஆஸ்பத்திரியிலிருக்கிறார்கள். இவர்களொருவருக்கும் வக்கீலில்லையாம். தாங்களே பேசிக்கொள்கின்றனராம்.

—

தியாதிபதி கூத்தாடினது—புருஷியாதேசத்திலே 17-வயதுப் பராயமுள்ள கேர்சினா என்னும்பெண்ணில் அவ்வூராளொருவன பாலாட்டத்திலே அவள்தன்னை கிள்ளினானென்று பிராதுசெய்தாள் அவள்குற்றத்தை யொப்புக்கொள்ளாமல் தனக்குக் கூத்தாடத் தெரியாதென்றும் சொன்னாள் சாட்சிக்காரர் அவளுக்குக் கூத்தாடத் தெரியுமென்றார்கள். இதன் உண்மையைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்த நீதவான் அந்தப்பாலாட்டத்தில் இவளோடு ஆடும்படி வந்தவர்களை யெல்லாம் விசாரித்து ஒவ்வொருவராய் அவளோடு ஆடவிட்டுப்பார்த்தார். அவள் ஆட்டத்தெரியாமையினாலே மற்றவர்களுடைய கால்புழுந்தாளகளை உதைத்து மிதித்துவிட்டாளபின்பு கோட்டியிலுள்ளவர்களை விட்டுப்பார்த்தார். அவர்க்கு மவ்வாறேசெய்தாள். இறுதியில் தாமே நேரிற்பரீக்ஷிக்கவிரும்பி நீதாசனத்தினின்றிறங்கி அவளோடு கைகோத்துக்கூத்தாடினார். பக்கவாத்தியங்கள் கோஷித்தன, அச்சமயத்தில்கோட்டுமண்டபம்-நடனமண்டபமாயிருப்பக்கண்டார். அவள் இவருக்குமவ்வாறே காலைமிதித்தாள்முடிவில் அவள்விடுதலையானாள்.

—

—கண்டிக் கவண்மேந் தேசண்டரின் பைசிக்கிலைத்திருடிய ஆதம் என்பவன பைத்தியக்கோலங்காட்டித் தப்பிக்கொள்ளப் பார்த்தான வைத்தியபரிசோதனை செய்தபோது சுத்த சித்தமுடையானெனக்காணப்பட்டு 3-மாசக்காவல்பெற்றான்.

I—நியூயோர்க்கிலுள்ள ஜெனரல் சின்சின்னரல்லெகன்றி என்னும்பிரசாதிபதி தமதரணமனையோடுதானேயெரிந்துபோனார் இவர் அரண்மனை மரத்தாற் கட்டப்பட்டது. வெடிக்குண்டு மருந்தை சுத்தப்படுத்தும்போதுதான் தீப்பற்றியது. ஒருமணிநேரம்வரையில் தீ யெரிந்துமுடிந்தது. அவரது குடும்பம் ரட்சிக்கப்பட்டது. அவரோடுகூட இருந்த வேலைக்காரரிலனேகரிறந்தனர். 100-பேர் காயப்பட்டோர்.

—

—ஆகாயத்தில் எவ்வாறு கைலேஞ்சி பெற்றாவ? கொழும்பிலே ஒருகுதிரைக்காரனிடத்தில்வேறொருவன் ஒருபட்டுலேஞ்சியைத்திருடினான்என்று அதிகப்பொலிஸ்பிடித்துக் கோட்டில் விட்டபோது. "அவனுடையதுதான்." என்னிடத்திலேதான் இருந்தது. அப்படி ஆகாயத்திலே பறந்து வரும்போது கையிலகப்பட்டது" என்றானும் 7-நாள் சிறையும் பெற்றானும்.

—

இதென்னவித்தை—!அநுராசபுரத்திலே ஒருடிஸ்திரிக்என்ஜினீர் வழியில்மின்றசனங்களைச்சருவிய முரட்டுயானையையும் அதன பின்னால்வந்த ஒருபிடியன்யானையையும் சுட்டுவீழ்த்தி யவற்றின்வாலையும் வெட்டிக்கொண்டு வந்தாரென்று சென்றவாரத்தி லறிந்தோம். ஆனால் அதேயானை நேற்றைத்தினத்தில்மூன்றுகிராமவாசிகளைத்தூர்த்தி யுயிரைப் போக்கியதாக வறிகிறோம். அப்போசுட்டது யாரை?

—

ஒருபெண்ணின் துக்கசெய்தி—கற்கத்தாவைச்சேர்ந்தகாடொன்றில்சாமசர்பானு என்னும் 13-வயதுப்பெண் தனபெற்றோரோடு தங்கள்குடிசையிலே நித்திரையாயிருக்கும்பொழுது சோல்மன் என்பவனும்வேறொருவனும் வீட்டுட்புகுந்து அவளைவலோற்காரமாகக்கொண்டுவெளியேவந்து அங்கேகாத்திருந்த 4பேரிடம்ஒப்பித்துவிட்டு தன்னைத்தடைசெய்த பெண்ணின் பிதாவுக்கு 2-அறைகொடுத்துத் கீழேவிழ்த்திவிட்டுப்பக்கத்தேயுள்ள மறைவிடத்தில் அவள் மானபங்கப்படுத்தும்பொழுது அவள் சத்தமிட்டதனாற் கழுத்தைநெரித்துக்காயப்படுத்தச்சத்தங்கேட்டுவந்த வழிப்போக்கரால பிடிபட்டுப்போலீஸில் இருக்கிறான் பிரக்ஞையற்றுக்கிடந்தபெண் அறிவுபெற்று நடந்ததெல்லாந் தாய்க்குச்சொன்னாளாம்—வழக்குச் செஷன்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

—

யாழ்ப்பாணப் புகையிலைச் செய்கைக்காரருக்கு ஒருவசதி—இலங்கைக் கிருஷிகத்தலைவர் மெஸ- லேயன் அவர்கள் சென்றவாரத்தில் யாழ்ப்பாணக்கச்சேரியிலே நமது ஏசண்டரை முதன்மையாகக்கொண்டு கிருஷிச் சங்கமொன்று கூடினர். அதிலே கிருஷிகத்தலைவர் தாம் யாழ்ப்பாணம் சிலாபம் முதலிய பலநாடுகளைச் சந்தித்துப் புகையிலைச்செய்கையைக் குறித்து ஆராய்ந்தபோது யாழ்ப்பாணமே தமக்கு உத்தமமானவிடமென்றும், யாழ்ப்பாணத்தில் விளைந்த யிலையானத்துக்கனுப்பும் புகையிலைத்திணைவில் பலவிதகட்டங்களிருப்பதால் அவ்வித புகையிலைச் செய்கையிலும் பார்க்க ஐரோப்பியர்க் கேற்றவிதமாய்ச் "சிகரற்" செய்யும்புகையிலையை யாழ்ப்பாணத்திற்செய்யவும், வெட்டியுலர்த்தவும் யாழ்ப்பாணிகளுக்குத் தாம் இலகுவிற் கற்பிக்கக் கூடுமென்றும் அதனால் யாழ்ப்பாணிகள் பெருந்தலாமடைய ஏதுவாகுமென்றும். இவ்விதபுகையிலைச் செய்கையினால் தாம தென்னாபிரிக்காவில் நல்லசித்தியெய்தியதாகவும் கூறினார்கள். ஆனால் இவ்விஷயத்திற் பேச்சளவில் நில்லாது, செய்கையளவிலும் முன்வந்து உதவிசெய்தல் மிகநலமாகும்.

—

பாட்டியைக் கொன்றவன்—கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே ஒரு பைத்தியகாரன் தன்பாட்டியைக் கத்தியால் வெட்டிக்கொன்ற வழக்குவிளங்கி எதிரி விடுதலை பெற்றனன்.

—

—நீர்கொழும்பிலே நாகமுத்து சைமன் என்னும் கஎ-வயது வாலிபன் இளைத்த எருதுகளை வண்டியிற் பூட்டி பாரமேற்றிய குற்றத்திற்காக உ௰-ரூபா அபராதமும் ௬0-அடியும் பெற்றான்.

—

அடக்கத்தின்பின்தகனம்—லஷ்யாடிக் சங்கத்தைச்சார்ந்தடிராக்குபார்கொம்பனியிலுள்ள கப்டின்லிச்என்பவர் இறந்தபோது பிரேதத்தை வெருசனசமுகத்தில்பொறனை யிடு கட்டிப்புதைத்துப் பின்பு கொப்பன்ஹேஹனிலுள்ள அவரது மனைவிக்குச சாம்பரனுப்பும் பொருட்டுத் தகனஞ் செய்தார்களாம்.

விதானைவேலை—கொக்குவில் விதானை அப்பாத்துரையவர்கள் விறந்துவிட அவரது வேலைக்குப் பலரும் மனுப்பண்ணி யிருந்தும் பெரியமுருகேசர் எனப் பிரசித்திபெறறவர் மகனும் அப்பாத்துரை விதானையின் தம்பியுமாகிய கந்தையாபிள்ளைக்கே நியமனமாயிற்று. இவர் மிக்க சுறுசுறுப்பும் நேர்மையுமுடையவர். மேலும் நன்மைபெறுவாராக.

—

